# 14

# அல்குர்ஆன் கூறும் நற்பண்புகள் II

## லுக்மான் (அலை) அவர்களின் உபதேசம்

இப்பாடத்தில் ஸூரா லுக்மானில் குறிப்பிடப்பட்டுள்ள லுக்மான் (அலை) அவர்கள் தனது மகனுக்குக் கூறிய நல்லுபதேசங்களைப் பற்றி அவதானிப்போம்.

- அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தல்.

அல்லாஹ் எமக்கு எண்ணிலடங்கா அருட்கொடைகளை வழங்கியிருக்கிறான். இவற்றுக்காக நாம் அவனுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று நடத்தல், அவன் விலக்கியவற்றிலிருந்து தவிர்ந்து வாழ்தல், மற்றும் அல்லாஹ்வைப் புகழ்ந்து துதி செய்தல் போன்றவை அவனுக்குச் செலுத்துகின்ற நன்றிகளாகும். நன்றி செலுத்தும் அடியார்களுக்கு மேலும் மேலும் அருட் பாக்கியங்களை அல்லாஹ் வழங்குகின்றான்.

- பெற்றோருக்கு உபகாரம் புரிதல்.

எம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கு உதவி உபகாரம் புரிவதன் மூலம் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அவர்களை மதித்து, அன்பு காட்டி அவர்கள் விடயத்தில் பெரிதும் அக்கறை கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும். அவர்களுக்காக எப்போதும் பிரார்த்திக்க வேண்டும். இவற்றின் மூலம் எமது வாழ்வை அல்லாஹ் சிறப்பாக்கி வைப்பான்.

- நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல்.

இவை நற்பண்புகளில் மிக உயர்ந்தவையாகும். இவற்றைச் செய்யுமாறு லுக்மான் (அலை) அவர்கள் தனது மைந்தனுக்கு உபதேசிப்பதன் மூலம், நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் பணியில் ஈடுபடுவதன் முக்கியத்துவம் உணர்த்தப்படுகின்றது. மேலும் இப்பணியைச் செய்வதன் மூலம் நிறைய நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இளம் வயது முதல் இப்பணியில் ஆர்வம் காட்டுவது எமது வாழ்வின் உயர்ச்சிக்கும், மகிழ்ச்சிக்கும் வழியை ஏற்படுத்தும்.


இலவச விநியோகத்திற்காக

وَلَقَدْ ءَاتَيْنَا لُقْمَٰنَ ٱلْحِكْمَةَ أَنِ ٱشْكُرْ لِلَّهِ ۚ وَمَن يَشْكُرْ فَإِنَّمَا
يَشْكُرُ لِنَفْسِهِۦ ۖ وَمَن كَفَرَ فَإِنَّ ٱللَّهَ غَنِىٌّ حَمِيدٌ ﴿١٢﴾ وَإِذْ قَالَ
لُقْمَٰنُ لِٱبْنِهِۦ وَهُوَ يَعِظُهُۥ يَٰبُنَىَّ لَا تُشْرِكْ بِٱللَّهِ ۖ إِنَّ ٱلشِّرْكَ
لَظُلْمٌ عَظِيمٌ ﴿١٣﴾ وَوَصَّيْنَا ٱلْإِنسَٰنَ بِوَٰلِدَيْهِ حَمَلَتْهُ أُمُّهُۥ
وَهْنًا عَلَىٰ وَهْنٍ وَفِصَٰلُهُۥ فِى عَامَيْنِ أَنِ ٱشْكُرْ لِى وَلِوَٰلِدَيْكَ
إِلَىَّ ٱلْمَصِيرُ ﴿١٤﴾ وَإِن جَٰهَدَاكَ عَلَىٰٓ أَن تُشْرِكَ بِى مَا لَيْسَ
لَكَ بِهِۦ عِلْمٌ فَلَا تُطِعْهُمَا ۖ وَصَاحِبْهُمَا فِى ٱلدُّنْيَا مَعْرُوفًا ۖ
وَٱتَّبِعْ سَبِيلَ مَنْ أَنَابَ إِلَىَّ ۚ ثُمَّ إِلَىَّ مَرْجِعُكُمْ فَأُنَبِّئُكُم
بِمَا كُنتُمْ تَعْمَلُونَ ﴿١٥﴾ يَٰبُنَىَّ إِنَّهَآ إِن تَكُ مِثْقَالَ حَبَّةٍ مِّنْ
خَرْدَلٍ فَتَكُن فِى صَخْرَةٍ أَوْ فِى ٱلسَّمَٰوَٰتِ أَوْ فِى ٱلْأَرْضِ يَأْتِ
بِهَا ٱللَّهُ ۚ إِنَّ ٱللَّهَ لَطِيفٌ خَبِيرٌ ﴿١٦﴾ يَٰبُنَىَّ أَقِمِ ٱلصَّلَوٰةَ وَأْمُرْ
بِٱلْمَعْرُوفِ وَٱنْهَ عَنِ ٱلْمُنكَرِ وَٱصْبِرْ عَلَىٰ مَآ أَصَابَكَ ۖ إِنَّ ذَٰلِكَ
مِنْ عَزْمِ ٱلْأُمُورِ ﴿١٧﴾ وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا تَمْشِ فِى ٱلْأَرْضِ
مَرَحًا ۖ إِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُورٍ ﴿١٨﴾ وَٱقْصِدْ فِى مَشْيِكَ
وَٱغْضُضْ مِن صَوْتِكَ ۚ إِنَّ أَنكَرَ ٱلْأَصْوَٰتِ لَصَوْتُ ٱلْحَمِيرِ ﴿١٩﴾

- தொழுகையைத் தவறாது தொழுதல்.

தொழுகை இஸ்லாத்தின் தூணாகும். ஈமானுக்கும் குப்ருக்கும் இடையில் வேறுபாட்டைக் காட்டக் கூடியதாகத் தொழுகை அமைந்துள்ளது. மறுமை நாளில் முதன் முதலில் தொழுகை பற்றியே விசாரிக்கப்படவிருப்பதாக ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. தொழுகை பாவத்திலிருந்து பாதுகாக்கும் கேடயமாகவும் விளங்குகின்றது. எனவே தவறாது பேணுதலாக தொழுது வருவோம்.

- பெருமையைவிட்டும் விலகி வாழ்தல்.

பெருமை அல்லாஹ்வுக்குரிய பண்பாகும். பெருமையடிப்போரை அல்லாஹ் வெறுக்கின்றான். பணிவாகவும் பண்பாகவும் நடப்போரை அவன் விரும்புகின்றான். பெருமைக்காரர்களை மனிதரும் கூட விரும்புவதில்லை. வெறுத்து ஒதுக்குகின்றனர். எனவேதான் லுக்மான் (அலை) அவர்கள் பெருமையுடன் மனிதரை விட்டும் முகத்தைத் திருப்பிக் கொள்ள வேண்டாம் என்றும் கர்வத்துடன் நடக்காது நடையில் மத்திய தரத்தைக் கடைபிடிக்குமாறும் உபதேசிக்கின்றார்கள்.

- அமைதியாகப் பேசல்.

உரையாடும்போது குரலைத் தாழ்த்தி கௌரவமாகப் பேச வேண்டும். உரத்த குரலில் பேசுவது கழுதையின் சத்தத்துக்கு ஒப்பிடப்படுகின்றது. எனவே, நாம் உரத்த குரலில் பேசுவதையும், கூச்சலிட்டுப் பிறரைக் கஷ்டத்துக்கு உள்ளாக்குவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பாடசாலை, பள்ளிவாசல் மற்றும் பொது இடங்களில் உரத்த தொனியில் உரையாடுவதையும் தேவையில்லாமல் பேசிக் கொண்டிருப்பதையும் தவிர்ந்துகொள்ள வேண்டும்.

எனவே, நாம் லுக்மான் (அலை) அவர்கள் தன் மகனுக்கு கூறியதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்ற மேற்படி பண்புகளையும், நல்லடியார்களின் நற்பண்புகளையும் எமது வாழ்வில் கடைபிடித்து நடப்போம்.

**பயிற்சி:**

1. லுக்மான் (அலை) அவர்களது உபதேசத்தில், செய்ய வேண்டுமெனக் கூறப்பட்டுள்ள காரியங்களையும் செய்யக் கூடாதெனத் தடுத்துள்ள காரியங்களையும் அட்டவணைப்படுத்திக் காட்டுங்கள்.

2. ஸூரா லுக்மானின் 12 முதல் 19 வரையிலான ஆயத்துக்களின் பொருளை தர்ஜுமாவில் பார்த்து எழுதுங்கள்